## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண்.84/2014** **நாள். 30.01.2024**

2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ம் நாள் 4 ம் எதிர்மனுதாரர் தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அகல்யா | தொழில் | |
| த. பெ./க.பெ. | ரமேஷ் | சாதி | |
| கிராமம் | சென்னை | மதம் | |
| வட்டம் | | வயது | 24 |

**எ..சா.1**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் எதிர்மனுதாரர் தரப்பில்-1 ம் சாட்சி ஆவேன். நான் **எ.சா. 1 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

**ஆவணங்கள் எதுவும் இல்லை.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் 3 ம் எதிர்மனுதாரர் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தால் தான் விபத்து ஏற்பட்டதால் மனுதாரர்களுக்கு எங்கள் நிறுவனம் நஷ்டயீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

## 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து நடந்ததாக சொல்லப்படும் கடந்த 06.12.2013 தேதியில் நான் எங்கள் நிறுவனத்தில் பணிபுரியவில்லை. விபத்து சம்பந்தமாக எங்கள் நிறுவனம் சார்பில் வெங்கடேசன் என்பவர் புலனாய்வு செய்தார். அவரின் பெயரை என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் கள ஆய்வாளர் யாரை சாட்சிகளாக விசாரித்தார்கள் என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த ராஜன் என்பவர் விபத்தை நேரில் பார்த்த நபர் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. கள ஆய்வாளர் அவரின் அறிக்கையில் விபத்து நடந்த ஜி.எஸ்.டி ரோடு இருபுறமும் சாலை உள்ள அகலமான ரோடு என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. கள ஆய்வாளர் அவரது அறிக்கையில் விபத்து நடந்த இடத்தில் இணைப்பு சாலையும், வேக தடையும் இருந்ததாக குறிப்பிடவில்லை. டாடா ஏசி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் டாடா ஏசி வாகனத்தின் இடது முன்புறத்தில் தான் சேதம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது . சம்பவ இடத்தில் இணைப்பு சாலையோ , வேகதடையோ இல்லாத நிலையில் திடீரென்று பிரேக் பிடிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த நேரம் அதிகாலை 4.45 மணி ஆகும். லாரி ஓட்டுநர் மெதுவாக கவனமுடன் லாரியை ஓட்டினார் என்றாலும் டாடா ஏசி வாகன ஓட்டுநர் தான் வாகனத்தை முந்தி செல்வதற்காக வேகமாக ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. புகார்தாரர் தவறாக புகார் கொடுத்ததால் தான் விபத்திற்கு யார் காரணம் என்று கண்டுபிடிக்க முடியாமல் வழக்கு முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. உரிய காலத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யாததால் பிரிவு 468 சி.ஆர்.சி.படி வழக்கு முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3 ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரால் விபத்து ஏற்பட்டுள்ளதால் எங்கள் நிறுவனம் தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. இறந்துபோனவர் டாடா ஏசி வாகனத்தில் இடது புறத்தில் அமர்ந்து சென்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . மனுதாரர்களுக்கு எங்கள் நிறுவனம் தான் முழுமையாக இழப்பீடு தரவேண்டும் என்றால் சரியல்ல.